*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(1), 2022*

# இப்னு அறபியின் வஹ்ததுல் வுஜூத் (இருப்புண்மை ஒன்றே) கோட்பாடு: ஒரு மெய்யியல் பகுப்பாய்வு

**பீ.எம். ஜமாஹிர்**
மெய்யியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

Correspondence: jjamahir@yahoo.com

**கட்டுரைச் சுருக்கம்**

இஸ்லாமிய சிந்தனையில் சூபித்துவம் தோன்றி வளர்ச்சியடைந்ததிலிருந்து சமய அறிஞர்களுக்கும் (உலமாக்கள்), பெரிய சூபிஞானியர்களுக்குமிடையே ஒரு அமைதியான முரண்பாடு ஆரம்பித்திருந்தது. பின்னைய காலப்பகுதியில் இம் முரண்பாடு பாரதூரமான பரிணாமங்களை அடைந்தது. இப்பின்புலத்தில் இக்கட்டுரையானது சூபித்துவ சிந்தனையில் பாரிய செல்வாக்கைச் செலுத்திய மாபெரும் அறிஞர் என அழைக்கப்படும் இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' (இருப்புண்மை ஒன்றே), எனும் கோட்பாட்டை மெய்யியல் ரீதியாக மொழிப்பகுப்பாய்வு செய்வதினை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்தகைய பகுப்பாய்வானது பொதுமொழி மற்றும் சூபித்துவ அனுபவ மொழியில் உள்ள வாக்கியங்களினதும் கருத்துக்களினதும் சரியான பாவனையினை வெளிக்கொணர உதவும். இப்னு அறபியின் கோட்பாடு உள்ளமை பற்றிய ஒருமைவாதமாக அடையாளப்படுத்தப்படுகிறது. அதாவது ஒரு இருத்தல் மட்டுமே உண்டு. ஏனைய இருத்தல்கள் அந்த ஒரு இருத்தலின் வெளிப்பாடுகளாகும். எனினும் பலருக்கு இக்கோட்பாட்டின் நுட்பமும் யதார்த்தமும் புரிவதில்லை. அத்துடன் சாதாரண மக்களின் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் சவாலாகவும் அமைந்துள்ளது. இந்த விடயத்தில் நடந்த தவறுகளைக் கண்டறியும் முயற்சியில் மொழிப்பகுப்பாய்வானது தெளிவினை ஏற்படுத்தும் என்பதை இவ்வாய்வு வலியுறுத்துகிறது. ஆய்வாளர் முதல்தர மற்றும் இரண்டாம்தரத் தகவல்களைப் பயன்படுத்தியுள்ளதோடு ஆய்வுடன் தொடர்புடைய நூல்கள் மூலமாகப் பெறப்பட்ட தகவல்களை வியாக்கியானங்களுக்கு உட்படுத்தியுள்ளார்.

**பிரதான சொற்கள்:** *வஹ்ததுல் வுஜூத், தாத், ஸிபத்து, ளாஹிர், மளாஹிர்*

## 1. அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டு மெய்யியலில் அதிலும் குறிப்பாக பகுப்பாய்வு மெய்யியல் சிந்தனைக்கு உயிர்ப்பூட்டுதலையும் ஆழமான தாக்கத்தையும் ஏற்படுத்திய விட்கன்ஸ்டைன், பகுப்பாய்வு என்பதை மொழியை வரைவிலக்கணப்படுத்துவதாக இல்லாமல் அதன் உபயோகத்தைக் கவனமாக விவரணப்படுத்துவதாகக் கொள்கிறார். இவ்வழியில் மொழிகளையும் மொழிகளின் பகுதிகளையும் அதன் தொடர்பாடல் முறைகளையும், சொற்களின் பயனையும் வெளிக்கொணர்வதே இங்கு பகுப்பாய்வு உள்ளடக்குகிறது எனலாம். இதன் மூலம் அடைய முயற்சிப்பது ஒழுங்கும் தெளிவுமாகும். (Kalanasuriya, 1987:25).

இஸ்லாமிய சிந்தனையில் அதிலும் சூபித்துவ சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்திய ஷெய்குல் அக்பர் (மாபெரும் அறிஞர்) என அழைக்கப்படும் இப்னு அறபியின் (கி.பி 1165-1240) மறைஞானத்தில் உள்ள ஒழுங்கையும் தெளிவையும் புரிய, மறைஞான மொழியின் செயல் முறையிலுள்ள பிரச்சினைகளை (முடிச்சுக்களை) அவிழ்ப்பதன் மூலம் கண்டு கொள்ளலாம். இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' (இருப்புண்மை ஒன்றே) கருத்துக்களைத் தெளிவுப்படுத்துவதற்கான முயற்சியில் பகுப்பாய்வு ஒரு தேர்ச்சியான முறையாகும். இதனூடாகச் சொற்களின் பாவனையில் அவை பெறும் பல்வேறு அர்த்தங்களைப் புரிந்து கொள்ள முடியும்.

மத்தியகால இஸ்லாமிய மெய்யியலாளரான இப்னு அறபியின் பிரதான பங்களிப்பு 'வஹ்ததுல் வுஜூத்' பற்றிய கோட்பாடாகும். 'அல்லாஹ்வின் (இறைவன்), உள்ளமை (வுஜூத்), மட்டுமே

உண்மை: பிரபஞ்சத்தின் இருப்பு தற்காலிகமானது. பிரபஞ்சம் அல்லாஹ்வினது உள்ளமையின் (வுஜூதின்) தெறிப்பேயாகும். பிரபஞ்சமாகத் தோற்றம் கொடுப்பது அல்லாஹ்வின் திருநாமங்களின் (பண்புகள்) வெளிப்பாடாகும். அல்லாஹ்வின் திருநாமங்கள் பிரபஞ்சமாகத் தோற்றம் கொடுத்திருப்பதால் அல்லாஹ் படைப்பில் இறங்கிவிட்டான் என்றோ அல்லது படைப்பில் ஐக்கியமாகிவிட்டவன் என்றோ பொருளாகாது'. என்று அவர் விளக்குகிறார். அதாவது உள்ளமை (வுஜூத்) ஒன்றுதான். அதுதான் அல்லாஹ்வின் உள்ளமையாகும். அந்த உள்ளமையிலிருந்தே 'இருப்பன'வாகவுள்ள யாவும் தமது உள்ளமையை, அதாவது இருப்பைப் (வுஜூத்) பெற்றுக்கொண்டன. 'தாத்'தே (சாரம் - மூலப்பொருள்) 'வுஜூத்' எனப்படுகிறது. ('தாத்' என்பது ஒரு பொருளின் பொருண்மையைக் குறிக்கும். இங்கே அல்லாஹ்வின் பொருண்மையை அல்லது சாரத்தைக் குறிக்கவே இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இது பண்புகளை வெளிப்படுத்துவது, விபரிக்கப்பட முடியாத யதார்த்தமாகும்).

'தாத்' ஏகத்துவத்தின் விஸ்தரிப்பாகும். ஒரே இறைவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. (There exists but one God). அந்த இறைவனைத் தவிர வேறு உள்ளமை (வுஜூத்) எதுவுமில்லை (There is nothing existence except God). பிரபஞ்சத்திலுள்ள எல்லாம் அந்த உள்ளமையிலிருந்து உண்டானவையாகும். ஏக உள்ளமையின் பண்பினால் மறைஞானியின் (சூபி), 'நான்' எனும் 'அகம்' அவரைவிட்டு நீங்கி விடும். அப்போது அவர் இறைவனில் மறைந்துவிடுவார். அதாவது, இறைவன் தன் ஏக உள்ளமையில் மறைத்துக்கொள்கின்றான் என்பதாகும்.

இங்கு 'வுஜூத்' (Wujud) என்பது இருப்பு (Existence) அல்லது உள்ளமை அதாவது உண்மை (Being) என மொழிபெயர்க்கப்படுகிறது. இதில் பெறப்படும் அல்லது பேசப்படும் அனுபவம் என்பது உள்ளமையின் ஒருமை அதாவது ஏகத்துவம் (Oneness of Being) அல்லது இருத்தலின் ஐக்கியமாகும் (Unity of Existence). ஆக, இப்னு அறபியின் கோட்பாட்டின் தன்மையை ஒருமைத் தன்மை (Oneness) அல்லது இறைவனின் ஏகத்துவத்தை குறித்து நிற்கிறது என அறியலாம். அதாவது, இதை உள்பொருளியல் சார் ஒருமைவாதம் (Ontological Monism) எனவும் குறிப்பிடலாம். அதாவது மெய்மை அல்லது உளது பற்றிய ஒருமைவாதம் என வரையறை செய்யலாம். இந்தக் கோட்பாடே 'வஹ்ததுல் வுஜூத்' என அழைக்கப்படும். இக்கோட்பாட்டை உடையோர் 'வுஜூதியா' என அழைக்கப்படுகின்றனர். இந்த 'வுஜூதியா' கோட்பாடு பேசும் 'தாத்' (சாரம்) மற்றும் 'ஸிபத்து' (பண்புகள்) பற்றிய கருத்தில் சூபிகளுக்கும், மெய்யியலாளர்களுக்கும் இடையில் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

மறைஞானியரான சூபிகள் 'பண்புகள்' நிலையானவை என்றும், அவை 'தாத்'தில் ஓர் உபரி என்றும் கருதுகின்றனர். மெய்யியலாளர்கள் பண்புகளே உண்மையில் 'தாத்' என்றும் 'தாத்'தும் ஸிபத்துக்களும் இரண்டறக் கலந்து அவனில் ஒழுங்கு படுத்தப்படுவையாய் இல்லை என்றும் கருதுகின்றனர் (Khajakhan, 1935:51).

இக்கூற்றின் முதலாவது கருத்தே ஒரு பகுப்பு முறையான (Analytic) கருத்தாகத் தோன்றுகிறது. அந்தக் கருத்தின்படி முதலில் தாத்தே ஏகமனதாயும் தன்னிறைவுற்றதாயும் இருந்தது. அதிலிருந்து பண்புகள் வெளியாகின.

இரண்டாவது கருத்து தொகுப்பு முறை (Synthetic) கருத்தாகத் தோன்றுகிறது. அந்தக் கருத்தின் படி பண்புகள் இருக்கின்றன. அவை இரண்டறக் கலந்து தன்னளவில் சூனியமான ஒன்றை விளைவிக்கின்றன. இது ஒட்சிசன் (Oxygen), ஐதரசன் (Hydrogen) ஆகியவற்றினூடாக ஓடும் மின்னோட்டம் ஒன்றிணைந்து இந்த இரண்டையும் தவிர வேறு எதுவுமே இல்லாத நீரை விளைவிப்பதைப் போன்றது. இது பௌத்த சமயம் சார் கருத்தாகும்.

சூபிகளினதும், மெய்யியலாளர்களினதும் கருத்துப்படி 'தாத்தே' உண்மையில் 'ஸிபத்து' (பண்பு)களாக, இருக்கின்றது. எடுத்துக்காட்டாக, உனது 'தாத்' (சாரம்) தானாகவே உன்னைப் பார்க்கும் ஆற்றலுடையவனாக ஆக்குவதில்லை. பார்வை என்ற பண்பிலேயே தங்கியிருக்கிறது. எனினும், 'அல்லாஹ்' பார்வையில் தங்கியிருக்கவில்லை. உன்னைப் போலன்றி அவன் தனது

‘தாத்’தைக் கொண்டே பார்க்கிறான். யதார்த்தத்தில் ‘தாத்’தும், ‘ஸிபத்’தும் ஒன்றேயாகும். ஆனால், புரிந்துக்கொண்ட விளக்கத்திலேயே அவை வெவ்வேறானதாய் இருக்கின்றன. பண்புகள் ‘தாத்’தின் முகங்கள் அல்லது அம்சங்கள் மட்டுமேயாகும். ஆகவே, பண்புகள் யதார்த்தத்தில் ‘தாத்’தே என்றுதான் சொல்ல முடியும். அதாவது கொள்கலனுமில்லை, கொள்ளப்படுவதுமில்லை. ஆனால், கொள்கலனாயும் கொள்ளப்படுவதாயும் வெளியாக்கியிருப்பது ஒரே ஒரு யதார்த்தமேயாகும். பலவான தன்மை கற்பனையில் இருக்கிறது அன்றி யதார்த்தத்தில் இல்லை.

உள்ளமையைப் பொறுத்தவரை ‘தாத்’தும் ‘ஸிபத்து’க்களும் ஒன்றேயாகும். ஆயினும் அறிகையைப் பொறுத்தவரை வேறானவையாயும் இருப்பதைப் போல வித்தியாசமானவையுமாகும். இந்த வகையீடு நயமதிப்பிலேயே இருக்கிறது. இவ்வாறு தாத்திலே மெய்யான முற்றொருமையும் (Identity) உண்டு. சங்கற்பமான வேற்றுமையும் (Diversity) உண்டு. புறவாதிகள் (sh`pup), கருதுவதைப்போல அவை வித்தியாசமானவையாயின், ஒவ்வாத - பிற்பட்ட ஒரு அடிப்படையை அவை எப்போதும் கொண்டவையாய் இருத்தல் வேண்டும் ஆனால் அவ்வாறு இல்லை.

வரையுற்ற அதாவது முடிவுள்ள ஒரு பொருளைச் சூழ்ந்து இருப்பதே அறிவு ஆகும். வரையற்ற அதாவது முடிவிலியான ஒரு பொருளைச் சூழ அதனால் இயலாது இவ்வாறு முழுமுதல் தன்மையில் ‘அல்லாஹ்’ தன்னை அறிந்தவனாகவே இருக்கிறான். இந்த நிலையில் அறிபவனாகவும் அறியப்படுபவனாகவும் இருப்பவன் அவனேயாகும்.

## 2. ஆய்வின் நோக்கம்

இப்னு அறபியின் வஹ்ததுல் வுஜூத் (இருப்புண்மை ஒன்றே) என்ற கோட்பாட்டினை விளங்கிக்கொள்ளும் முயற்சியில் மொழிப்பகுப்பாய்வின் தெளிவினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

## 3. இப்னு அறபியின் வஹ்ததுல் வுஜூத் கோட்பாடு

இப்னு அறபியைப் பற்றி, இமாம் இப்னுதைமிய்யா பின்வருமாறு குறிப்பிடுகிறார். ‘வஹ்ததுல் வுஜூத்’ பற்றிய கோட்பாட்டைப் போதித்தவர்களுள் இப்னு அறபி இஸ்லாமிய கோட்பாட்டுக்கு மிக நெருங்கியவராவார். அவரது பல கருத்துக்கள் இஸ்லாத்திற்கு உடன்பாடான வகையிலேயே காணப்படுகின்றன. இவர் ‘அள்-ளாஹிர்’ எனும் வெளிரங்கமானதற்கும் ‘மளாஹிர்’ எனும் பிரத்தியட்சமான வெளிப்பாடுடைய பொருள்களுக்குமிடையில் வித்தியாசப்படுத்துவதுடன் சமயச் (தீன்) சட்டங்களை அங்கீகரித்து ஏவல், விலக்கல் ஆகியவற்றை அங்கீகரிக்கின்றனர். சூபிகளான ஆத்மஞானிகள் நன்னடத்தை, இறைவணக்கம், இறைதியானம் முதலான விடயங்கள் சார்ந்த ‘ஸுலூக்’ என்னும் நடைமுறை பற்றி குறிப்பிட்டுள்ள பல விடயங்களை இப்னு அறபி சிலாகித்துக் குறிப்பிட்டு அதனைக் கடைப்பிடிக்கும்படி போதிக்கின்றார். இதனால் தான் பல சூபிகள் இப்னு அரபியின் நூல்களில் காணப்படும் ஆன்மீகப் பயிற்சிகளைக் கடைப்பிடித்துப் பயனடைகின்றனர். அவர்களில் பலருக்கு இந்த ஆன்மீக அனுஷ்டானங்களும் பயிற்சிகளின் நுட்பமும், யதார்த்தமும் புரிவதில்லை. ஆனால் உரிய முறையில் விளங்குவோரும் புரிந்து கொள்வோரும் அவரது போதனைகளின் உண்மையான அர்த்தத்தை அறிந்துக் கொள்கின்றனர் (இப்னுதைமிய்யா: *176*).

அக்பரியா பள்ளியின் (School of Akbariyya) நிறுவனரான இப்னு அறபி சூபித்துவ வரலாற்றில் மிக உயர்ந்த இடத்தை வகிப்பவர். ஆயினும் சூபித்துவத்தோடு ஆழமான தொடர்புடைய அறிஞர் சிலர் அவரது கருத்துக்களில் நல்லபிப்ராயம் கொண்டிருக்கவில்லை. அத்தகையவர்களுள் இரண்டாவது ஆயிரம் ஆண்டின் புத்துயிர்ப்புவாதி (முஜத்தித் அல்ப்தானீ) என அழைக்கப்படும் இந்தியாவைச் சேர்ந்த அஹ்மத் ஸர்ஹந்தி *(1564-1626)* குறிப்பிடத்தக்கவர். அவர் இப்னு அறபி பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு எழுதுகிறார்:

‘ஷெய்க் முஹ்யத்தீன் (இப்னு அறபி) உளத்தெளிவும், இறைஞானமும் அருளப்பட்டவர்களுள் ஒருவராகத் தோன்றுவது ஆச்சரியமாக இருக்கிறது. ஏனெனில் அவரது அனுபவங்களில் சில மற்றவர்களின் அனுபவங்களிலிருந்து வேறுபட்டவையாக மட்டுமன்றி தவறானவையாகவும்

இருக்கின்றன'. (Ali Nadwi, 1975:38-39). அவர் மேலும் கூறுகின்றார்: 'அவரது (இப்னு அறபியின்) பேரானந்த அனுபவங்களுள் சில வைதீகமரபினரின் போதனைகளோடு ஒத்துப்போவதில்லை. தவறானவையாயும் இருக்கின்றன' (அ-நூல்,39).

இப்னு அறபிக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டு நீண்ட காலமாக இஸ்லாமிய சிந்தனையில் இருந்து வருகின்றது. அதிலும் குறிப்பாக, 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டில் கிரேக்க மற்றும் வேதாந்த அத்வைத சிந்தனைகளின் தாக்கமுண்டு என்றும் இக்கோட்பாடு இஸ்லாத்துக்கு முரணானது என்றும் விமர்சனங்கள் உள்ளன. எனினும் எம்.சி.சித்திலெப்பை தனது 'அஸ்ராருல் ஆலம்' (1928) எனும் நூலில் சூபித்துவ ஞானத்திற்கும், இந்து சமய ஞானத்திற்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துரைப்பதுடன் கூடுதலாக இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டை ஆதரிப்பவராகவும் காண முடியும். அதே நேரம் முஹம்மது அப்துர் ரஹ்மான் ஸாஹிபு தனது 'முஸ்லிம் அத்வைத மூல மொழி' (1962) எனும் நூலில் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டையும் இந்து சமய வேதாந்த பகுதியையும் இணைத்து விளக்கி இரண்டையும் ஒன்றாகக் காண்பதும் குறிப்பிடத்தக்கது.

'வஹ்ததுல் வுஜூத்' என்றால் இறைவனின் இருப்புண்மையைக் குறிக்கும். இருப்புண்மையைப் பெற்றிருக்கும் ஒரே உள்பொருள் இறைவன் ஒருவனே. மற்றவை அனைத்தும் இருப்புண்மை இல்லாதனவே என்பது இதன் கருத்து. இப்னு அறபியைப் பொறுத்தவரை இறைவனின் 'வுஜூத்' என்பதும் 'தாத்' (சாரம்) என்பதும் ஒன்றே. 'வுஜூத்' என்ற சொல்லை இப்னு அறபி இந்தக் கருத்திலேயே கையாண்டிருக்கிறார். 'அல்லாஹ்' அல்லாத அனைத்துச் சிருஷ்டிகளினதும் இருப்புண்மை (வுஜூத்) உள்ளதாக இருக்கும் மெய்ப்பொருளின் இருப்பையே ஆதாரமாகக் கொண்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், சிருஷ்டிகள் யாவும் உள்பொருளான இறைவனது இருப்புத்தன்மையின் தெறிப்புக்கள் ஆகும். இந்த வகையில் பிரபஞ்சத்தை இப்னு அறபி மெய்ப்பொருளின் தெறிப்பாகவே கருதினார். ஆடியில் தோன்றும் தெறிப்புக்குத் தற்காலிகமான இருப்புண்மை இருப்பது போல சிருஷ்டிகளுக்கும் தற்காலிகமான இருப்புண்மையே உண்டு. தெறிப்புத் தனது இருப்புக்குத் தெறிப்பைத் தோற்றுவிப்பதில் தங்கி இருப்பதைப் போலச் சிருஷ்டிகள் தம் இருப்புக்கு இறைவனின் இருப்புண்மையில் தங்கியிருக்கின்றன. தெறிப்பு தெறிப்புக்குரிய பொருளாகாததைப் போல சிருஷ்டிகள் ஒருபோதும் சிருஷ்டிகர்த்தா ஆவதில்லை.

மேலும், குயவன்-பாத்திரம் என்ற உருவகமானது அல்லாஹ்வுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையேயுள்ள தொடர்பை மிகச் சரியாகப் புரிந்துகொள்வதற்கு ஏற்றதொரு உதாரணமாகும். இந்த உருவகத்தை நோக்கின் அல்லாஹ்வுக்கும் சிருஷ்டிகளுக்கும் இடையேயுள்ள பிரத்தியேகமான தொடர்பு இலகுவாகப் புலப்படும். இவ்வகையில் இருப்புள்ளவன் அல்லாஹ் மட்டுமே மற்றவை அந்த இருப்பின் வெளிப்பாடுகளே. மனிதனின் 'நான்' என்ற உணர்வு அழிந்தபின் படைத்தவன் பக்கம் சேருகிறான். படைப்பு எவ்வளவு உயர்ந்தாலும் அல்லாஹ்வாக முடியாது. அல்லாஹ்வின் வுஜூத்தான் பல்வேறு வடிவங்களாக பிரபஞ்சத்தில் தோன்றியிருக்கின்றது. இந்த வகையில் உள்பொருளாகிய 'வுஜூத்' ஒன்றுதான் என்று அறிவதே 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டின் சாரம்சமாகும்.

'அல்லாஹ்' ஏகனாயும் அதே சமயம் பலவாயும் இருக்கிறான் என்பதற்கு குர்ஆனில் தன்மைப் பன்மையில் பேசும் வசனங்களே நல்ல சான்றாகும். அதிகமான இடங்களில் 'அல்லாஹ்' நாம், நாம் என்றே குறிப்பிடுகிறான். இதற்குச் சிலர் 'அல்லாஹ்' தனது அமரர்களையும் கருத்தில் வைத்தே இப்படிப் பேசியிருக்கிறான் என்கின்றனர். ஆனால் இது தவறானது. சிருஷ்டிகளாக வெளியாகியிருக்கும் தனது 'தாத்'தின் 'தஷ்பீஹ்' (ஒப்புவமைநிலை) நிலையினைக் கருத்தில் வைத்தே அவன் இவ்வாறு தன்மைப் படர்க்கையில் பேசியிருக்கிறான் எனக் கருதலாம். மேலாக, குர்ஆன் அரபு மொழியில் இறக்கப்பட்டது. அம்மொழியில் ஒருமைக்கு பன்மைச் சொல்லை உபயோகிப்பது அரேபிய வழக்கத்தில் உள்ளது. இப்பன்மை உபயோகமானது கௌரவ நிலையில் பயன்படுத்தப்படுவதாகும். இறைவனைத் தவிர கண்ணியம் உடையவன் வேறு யாரும் இல்லை. இந்த கண்ணியத்தை உறுதிப்படுத்துவதற்கு பன்மைத்துவ விளக்கம் பயன்படுத்துவது அரேபிய வழக்கமாகும். குர்ஆனில் 'உன்னிடம் ஓதிக் காட்டுகின்றோம்', 'உன்னிடம் கதையாகக் கூறுகின்றோம்'

போன்ற பன்மை உபயோகங்கள் அரபு மொழியில் ஒருவனாகவும் கண்ணியமாகவும் இருக்கும் போது வழக்கமாக உபயோகப்படுத்தப்படுவது வழிமுறையாகும் (இப்னு தைமிய்யா: 128).

இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு அல்லாஹ்வின் அகமானவன் (பாதின்), வெளியானவன் (ளாஹிர்) ஆகிய இரு நிலைகளையும் விளக்குவதாக அமைந்துள்ளது. புறம் (External - ளாஹிர்) என்பது ஆத்ம உலகம், சூக்ம உலகம், சட உலகம் என்பன பற்றியதாகவும் அமைகின்றது. அதாவது புறம் என்பது படைப்பு என்றும், அகம் (Inner - பாதின்) என்பது ஒப்புவமைகள் அற்ற தூய நிலையாகவும் (தன்ஸீஹ்) அதாவது அல்லாஹ்வின் வுஜூத் என்றும், மாறாக புறம் (ளாஹிர்) என்பது ஒப்புவமை (தஷ்பீஹ்) உடையதாகவும் அமைகின்றது.

இங்கு 'தன்ஸீஹ்' என்ற தூய்மையான பகுதியும் ஒப்புவமையான 'தஷ்பீஹ்' என்ற இரு பகுதிகளும் வுஜூதின் இருநிலைகளாகும். இவ்விரண்டும் வுஜூதைத் தவிர்ந்து வேறு இல்லை. இறைவன் குர்ஆனில் 'அவனைப் போல் ஒரு பொருளுமில்லை' என்று தன்ஸீஹ்கையும் 'அவன் கேட்பவனும் பார்ப்பவனுமாய் இருக்கிறான்' என்று தஷ்பீஹையும் கூறுகிறான். அவனைத் தஷ்பீஹ் இல்லாமல் தன்ஸீஹ் ஆக்கினால் அவனைத் தன்ஸீஹைக் கொண்டு மட்டுப்படுத்தியதாகிவிடும். அவனைத 'தன்ஸீஹ்' இல்லாமல் 'தஷ்பீஹ்' ஆக்கினால் அவனைத் தஷ்பீஹைக் கொண்டு மட்டுப்படுத்தியதாக ஆகிவிடும். இவ்விரண்டு பகுதிகளிலும் வுஜூதைத் தவிர்ந்து வேறு எதுவும் கிடையாது. இவ்விரண்டு பகுதிகளும் ஒன்றுசேர அறிபவனே ஏகத்துவவாதியாவான். அதாவது இவ்விரண்டு விதமான பண்பின் மூலம் 'வுஜூத்' ஒன்றேயாகும். எனவே முடிவு ஒன்றாக வேண்டும். அதுவே முழுமையாகும். இம்முழுமையை அறிபவனே பூரணமான மனிதன் ஆவான். ஆக, இப்னு அறபியின் 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு அல்லாஹ்வின் 'அகம்' சார்ந்த பகுதியையும் 'புறம்' சார்ந்த பகுதியையும் ஒன்றாகக் காணுகின்றது என அறியலாம்.

சூபித்துவ நெறியை விமர்சனம் செய்யும் பழமைவாதிகள் இந்த 'தன்ஸீஹ்' என்பது இந்துமத அத்வைதத்தில் காணப்படும் 'நிர்க்குண பிரம்ம' நிலையே என்று கூறுகின்றனர். ஆனால், இந்து வேதாந்திகள் கூறும் 'நிர்க்குணம்' வேறாகும். அவர்கள் குறிப்பிடும் நிர்க்குணநிலையில் பண்புகள் (குணம், குறி) எந்த வடிவத்திலுமில்லை. பண்பு எதுவும் எந்த நிலையிலும் இல்லாத பிரம்மத்தையே அவர்கள் நிர்க்குணம் என்கின்றனர். ஆனால் சூபிகள் கூறும் 'தன்ஸீஹ்' என்பது எல்லையில்லாமலும் மறைந்து கிடக்கும் பண்புகளை தன்னுள் பொதிந்திருப்பதுமான 'தாத்'தின் நிலையாகும். அத்வைதிகளின் கோட்பாடு 'பிரம்மம்' என்ற 'தாத்'தையே ஒரு பூச்சியமாக்கிவிடுகிறது. சூபிகளின் கோட்பாடோ 'தாத்' என்ற பிரம்மத்தை எல்லா எண்களையும் தன்னுள் அடக்கிய ஒன்றாக்குகிறது.

எந்த நிலையிலும் வேறானது என்பது இல்லை. 'எல்லாம் அல்லாஹ்வே' என்று அனைத்திறைக் கோட்பாடு (Pantheism) அதாவது இயற்கையாவையும் இறையுருவே என பேசுவோர் பின்வரும் விடயத்தை நன்கு புரிந்துக் கொள்ள வேண்டும். 'இருக்கும் வுஜூத் ஒன்றேதான். அது தான் அல்லாஹ்வின் வுஜூத்' என்ற கருத்தில் சூபித்துவத்தின் பயிற்சியாளர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை. பிரபஞ்சமும் அதிலுள்ள எல்லாப் பொருட்களும் அவனது வுஜூதாகவே இருக்கின்றன. ஆனால் வஹ்தத்தின் (ஏகமான) கட்டத்திலேயே இது சாத்தியமாகின்றது என்பதை மறந்துவிடலாகாது. அந்த வுஜூத் 'வஹ்தத்'தின் கட்டத்திலிருந்து கீழே இறங்குகையில் வேறான தன்மை ஏற்பட்டு விடுகின்றது. அப்போது இப்னு அறபி கூறுவது போல 'அப்து' (அடியான்) அப்துவாகவும், 'றப்பு' (அல்லாஹ்) றப்பாகவுமே இருக்கின்றனர். மெய்ஞானி ஒருவனைப் பொறுத்தவரை சாதாரண நிலையில் தன்னுணர்வோடு இருக்கும் போது வேறானதைப் பார்ப்பவனாகவே இருக்கின்றான். அப்போது அவன் அல்லாஹ்வை சிருஷ்டிகர்த்தாவாயும் பிறவற்றை சிருஷ்டிப் பொருள்களாகவுமே காண்கின்றான். ஆயினும் அவன் யதார்த்தத்தில் வேறாய் இல்லை என்பதையும், இருப்பதெல்லாம் ஏகமான ஒரே வுஜூதே என்பதனையும் உணர்ந்து அறிந்தவனாகவே இருக்கின்றான். 'இல்முல் யகீன்' என்ற இந்த அறிவை மட்டும் வைத்துக்கொண்டு 'எல்லாம் அல்லாஹ்வே' என்று அவன் கூறுவதில்லை. அது தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் தன்னுணர்வோடு உள்ள நிலையைப் பொறுத்தவரை அவன் 'ஷரீஅத்' என்ற சட்ட(புற)நெறியை

முழுக்க முழுக்க பின்பற்றுபவனாகவும் அதன் சட்டங்களுக்கு கட்டுப்படுபவனாகவும் இருத்தல் வேண்டும்.

வேறாய் இருந்தால் மட்டுமே பணிதலும் வழிபடுதலும் சாத்தியமாகும். இந்த வேறான தன்மை அல்லாஹ்வுக்கு இடையே உள்ள ஒரு திரை போன்றது. இந்தத் திரை அகற்றப்பட்டுவிட்டால் ‘ஷரீஅத்’ தேவை இல்லாமல் போய்விடும். சன்மார்க்கம் (தீன்) எனும் வாழ்க்கை நெறி என்பது அர்த்தம் அற்றதாகிவிடும். ஆயினும் இந்த வேறான திரை அகற்றப்படும் வேளையும் உண்டு. அதுவே ஒருவன் தனது அறிவில் ஏற்கனவே உறைந்திருக்கும் உண்மையை நிதர்சனமாக, அனுபவ ரீதியாகக் கொண்டு வேறானதை மறுக்கிறான். இதுவே வஹ்தத்தின் சமுத்திரத்திலிருந்து ஒரு நீர்க்குமிழியாக வெளியாகி இருக்கும் ‘ஸாலிக்’ (மெய்ஞானி) அதே சமுத்திரத்தில் தனது குமிழித் தன்மையை கரைத்து தன்னைச் சமுத்திரமாக காணும் கட்டமாகும். இந்நிலையை ‘கிதாபுல் அஜ்விபா’ எனும் நூலில் இப்னு அறபி பின்வருமாறு கூறுகின்றார்: *அவனாலே அவன் அவனை அறிகின்றான். பிரபஞ்சம் என்பது, படைப்புக்களற்ற அவனின் தனித்துவத்தையும் ஒருமை நிலையையும் மறைக்கும் ஒரு திரையாகும்* (முஹம்மது சஹாப்தீன், *1995:131-132).*

அல்லாஹ்வின் இறக்கங்களுள் (தன்ஸீலாத்), ஒன்றான ‘வஹ்தத்’ (ஏகம்) என்ற இந்தக் கட்டத்தில் சிருஷ்டி - சிருஷ்டியாளன் என்ற வேறுபாடு இன்றி சிருஷ்டிகள் யாவும் அல்லாஹ்வோடு முற்றொருமை (Identity) உடையனவாக இருக்கின்றன. இந்தக் கட்டத்தில் அல்லாஹ் தன்னை வேறாகவும் தனது பண்புகள், நாமங்கள், செயல் ஆற்றல்கள், நிலையான கருத்துப் படிவங்கள் (அஃயானெ தாபிதா), சிருஷ்டிகள் முதலானவற்றை வேறாகவும் காண்பதில்லை. குறிப்புக்கள் அற்ற உள்வாங்கு நிலையான இந்தக் கட்டத்தை இறைவனின் நல்லடியார்கள் ‘ஃபனா’ என்ற தன்னழிப்பு மூலம் அடைகின்றனர். இந்த நிலையில் அவர்கள் தம்மை வேறாகவும் அல்லாஹ்வை வேறாகவும் காண்பதில்லை. காணவும் முடியாது. இந்தக் கட்டத்தை அடைந்தவர்களே தமது சுயத்தை முற்றாக இழந்த நிலையில் ‘நானே மெய்ப்பொருள்’, ‘அல்லாஹ்வே எல்லாம்’ என்பன போன்ற வார்த்தைகளை வெளியிடுகின்றனர். சமயம் குறித்த சட்ட விரிவுரையாளர்கள் இவை இஸ்லாமிய சமய சட்ட வரையறைக்கு முரணான வார்த்தைப் பிரயோகங்கள் எனக் கூறுகின்றனர்.

எனினும் சிருஷ்டிகள் ‘வஹ்தத்’ என்ற கட்டத்திலிருந்து பிரிந்து ‘வாஹிதியத்’, ‘ஆலமுல் அர்வாஹ்’, ‘ஆலமுல் அஜ்ஸாம்’ முதலான கட்டங்கள் மூலம் வேறாகிவிட்ட பின்னர் தம்மை அல்லாஹ்வோடு முற்றொருமை உடையவையாகக் கருதவோ கூறுவோ முடியாது. ஏனெனில் ஏகமான தன்மை வஹ்தத்திற்கு கீழுள்ள பிற இறக்கங்கள் (குறைந்த தரம்) வாயிலாக அகன்று வேறான தன்மை (கைரியத்) ஏற்பட்டுவிட்டால் முந்திய கட்டம் பற்றிய நினைவும் உண்மையும் மேல் எழ முடியாது. உப்பு கடல் நீரில் இருந்து பிரிந்து வேறாகிவிட்ட பின்னர் தன்னை எப்படி கடல் என்று அழைத்துக் கொள்ள முடியாதோ அப்படியே வஹ்தத்திலிருந்து கீழ் இறங்கிய மனிதன் அல்லது சிருஷ்டி தன்னை ஏக பொருளாகக் குறிப்பிடவோ காணவோ முடியாது. உப்பு தன்னைக் கடலாகக் காண்பதாக இருந்தால் அது மீண்டும் கடலில் கரைந்தாக வேண்டும். அவ்வாறே சிருஷ்டியும் தன்னை ஏகமாகக் காண்பதாக இருந்தால் அது ‘வஹ்தத்’ கடலில் தன்னைக் கரைத்துக் கொள்ள வேண்டும். இந்த அனுபவத்தை ஆத்மீக ஞானிகள் ‘ஃபனா’ என்ற தன்னழிப்பின் மூலம் அடையலாம் எனக் கூறுகின்றனர்.

இப்னு அறபி ‘ஃபனா’ இரண்டு விடயங்களைக் கொண்டது. என்கிறார். ஒன்று மெய்ஞானக் கருத்தில் அமைந்த ஃபனா, மற்றையது உளவியல் கருத்தில் அமைந்த ஃபனாவாகும். முந்தியதில், ஃபனா என்பது அறியாமை அழிந்து, முழுமையும் அடங்கிய ஏகத்துவத்தின் (உள்ளுணர்வினால் ஏற்பட்ட) திடமான அறிவில் நிலைப்படுதலாகும். இது ஒரு படிவம் என்ற வகையில் ஞானி அல்லது ஸாலிக் தனது அகத்தின் இல்லாமையை உணர்ந்தறிதலேயன்றி அகத்தை இழத்தல் அன்று. பிந்தியதில், ஃபனா என்பது காட்சி உலகின் படிவங்கள் அகல்தலும் ஏகமான ஒரே பிரபஞ்ச சாரம் தொடர்தலும் ஆகும். இது பற்றி அவர் குறிப்பிடுகையில், *இன்னொரு படிவத்தில் அல்லாஹ்வின் ‘தஜல்லீ’ (ஒளிர்வு) நிகழும் கணத்தில் ஒரு படிவம் மறைந்து விடுவதே அதன் ஃபனா ஆகும்* என்கிறார். *(புஸூஸுல் ஹிகம்:230).*

உண்மையில் ஓர் எல்லைப்பாட்டில் அல்லது குறிப்பீட்டில் தோன்றும் 'தாத்'தின் தோற்றமே 'தஜல்லீ' எனப்படுகிறது. இறைவன் தனது அடியானுக்கு அவன் அதிகம் விரும்பித் தேடும் வடிவத்திலே 'தஜல்லீ' அளிக்கிறான். நபி மூஸா (அலை) ஷீஅய்பின் வீட்டிலிருந்து எகிப்துக்குத் திரும்பிச் சென்ற வழியிலே, பாலைவனத்தில் நெருப்பைத் தேடிக் கொண்டிருந்தார். அப்போது அல்லாஹ் 'எரியும் புதரிலே' தனது தஜல்லீயை வெளிப்படுத்தினான். இவ்வாறு ஒருவன் எந்த உருவத்தில் அவனைத் தேடுகிறானோ அவன் அந்த உருவத்தில் 'தஜல்லீ' அளிப்பான். மலை, மரம், கல், பெண் குழந்தை முதலான எப்பொருளின் உருவத்திலும் அல்லாஹ்வின் 'தஜல்லீ' ஏற்படலாம். 'தாடி முளைக்காத அழகிய இளைஞனின் உருவத்தில் இறைவனைக் கண்டேன்' என்று நபி (ஸல்) கூறியிருப்பதும் அறியத்தக்கது. எனினும் யதார்த்தத்தில் இல்லாத ஒரு பொருளை- அதாவது தஜல்லீயை- தாத்தாக அல்லது இறைவனாக எண்ணிக் கொள்வதும் அதனை வழிபடுவதுமே விக்கிர ஆராதனையாகும். இப்னு அறபியின் கருத்துப்படி, ∴பனா ஏழு கட்டங்களைக் கொண்ட ஒரு படிமுறைச் செயற்பாடாகும் (பார்க்க, புதூஹாத்துல் மக்கியா: 675-676). ∴பனா நிலைக்கு உள்ளானவர் '∴பானீ' எனப்படுகிறார்.

இவ்வாறு ஆத்மீக ஞானிகள் தமது தன்னழிப்பின் மூலம் அடைந்த அனுபவத்தையும் ஞானத்தையும் ஒருவர் அறிந்து யதார்த்தத்தை புரிந்து வைத்துக் கொள்ளலாமே ஒழிய, அவர் அதனை முழு முதலான உண்மையாக சுய உணர்வோடு அடித்துக் கூற முடியாது. அவ்வாறு சொல்லுதல் இறைமறுப்பும் (கு∴ப்ர்), இணைவைத்தலுமே (ஷிர்க்) ஆகும். இதற்கு 'தவ்பா' என்ற பாவமன்னிப்புத் தவிர வேறு பரிகாரமோ மீட்சியோ கிடையாது. சாதாரண மனிதர்களைப் பொறுத்தவரை அல்லாஹ்வை சிருஷ்டிகர்த்தாவாகவும் அவன் அல்லாத மற்ற அனைத்தையும் சிருஷ்களாகவும் கருதி அவனது அடிமைகளாக நடந்து கொள்ளுதல் ஒன்றே போதுமானதும் எதிர்பார்க்கப்படுவதுமாகும். அல்லாஹ்வின் இருப்புண்மையைக் (வுஜூத்) கொண்டு நிலை பெற்றிருக்கும் சிருஷ்டிகளுக்கெனத் தனியான சொந்த இருப்புண்மை இல்லை என்ற அறிவு ஒன்றே அவர்களுக்குப் போதுமானதாகும். இதற்கு அப்பால் அந்த வுஜூதோடு தம்மை முற்றொருமை உடையதாகக் காண்பதும் கருதுவதும் தேவையற்றதும் ஆபத்தானதுமாகும். இதனை குர்ஆன் '.... அவனோ (அல்லாஹ்) இவர்கள் வர்ணிப்பதிலிருந்து மிக்க பரிசுத்தமானவனாகவும் உயர்ந்தவனாகவும் இருக்கின்றான்' (குர் ஆன், 6:100) என்று உணர்த்துகிறது.

இந்த அடிப்படையில்தான் இப்னு அறபி தமது 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாட்டை விளக்கியுள்ளார். 'இருப்புண்மை (வுஜூத்) ஒன்றுதான். அந்த இருப்புண்மையைத் தவிர உள்ளதாக இருப்பது எதுவுமே இல்லை' என்று கூறிய அவர், 'ஆயினும் றப்பு றப்புதான், அப்து அப்து தான்' என்றும் அடித்துக் கூறினார். இவ்வாறு கூறியதன் மூலம் அவர் ஒரு கட்டத்திற்குப் பிறகு வேறான தன்மை (கைரியத்) உண்டு. என்பதையே அவர் சூசகமாக வெளிப்படுத்தினார். இந்த வேறான தன்மையைக் கருத்தில் கொண்டேதான் அல்லாஹ் மனிதர்களுக்காக தீர்க்கத்தரிசிகளையும் தூதர்களையும் வேதங்களையும் ஷரீஅத் என்ற சட்ட நெறிகளையும் இறக்கி அருளினான்.

## 4. முடிவுரை

இப்னு அறபியின் தத்துவம் இரண்டு பிரச்சினைகளைத் தெளிவுப்படுத்துவதைக் காணலாம்: ஒரு இருத்தல் மட்டுமே உண்டு; ஏனைய இருத்தல்கள் இல்லை ஆனால் ஏனையவைகள் ஒரு இருத்தலின் வெளிப்பாடுகளும் தோற்றப்பாடுகளும் மாத்திரமே என்பதுமாகும். எனினும், 'வஹ்ததுல் வுஜூத்' கோட்பாடு பல சந்தர்ப்பங்களில் சாதாரண மக்களின் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் சவாலாக அமைந்துவிடுகின்றது. சந்தேகமின்றி இப்னு அறபி பிற்கால சூபிகள் மீதும் அவரது கோட்பாடுகளை நிராகரித்தவர்கள் மீதும் பாரிய செல்வாக்கை செலுத்தினார். அதிகமானோர் அவரின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். இருப்பினும் சூபிகளுக்கு மத்தியில் 'வஹ்ததுல் வுஜூத்' எனும் அடிப்படைச் சிந்தனைக்கு அப்பால் உண்மையான மறைஞான அறிவு சார் வளர்ச்சி இருக்கவில்லை என்ற மதிப்பீட்டைப் பெற முடியும்.

## உசாத்துணைகள்

Ali Nadwi, A.H. (1975). *Religion and Civilization*, Lucknow, Academy of Islamic Research and Publication.

Kalanasuriya, A.D.P. (1987). *A Philosophical Analysis of Buddhist Nations, (The Buddha and Wittgenstein)*, Delhi, Sri Satguru Publications.

Khaja Khan, K.S. (1935). *The Secret of Anal Haqq,* Lahore*, S.H.Mouhummod Ashraf.*

இப்னு அறபி (ஆ.இ), *புதூஹாத்துல் மக்கிய்யா,* கெய்ரோ, *பாகம்-II.*

இப்னு தைமிய்யா, (ஆ.இ), *மஜ்மு அதுர்ரஸா இல் வல்மஸா இல்,* கெய்ரோ, *பாகம் - 01.*

இப்னு தைமிய்யா, (ஆ.இ), *மஜ்முஉல் ஃபத்தாவா,* கெய்ரோ, *பாகம் - 05.*

சித்திலெப்பை, எம்.சி. *(1928). அஸ்ராருல் ஆலம்*, கொழும்பு, டயமண்ட் பிரஸ்.

முஹம்மது அப்துர் ரஹ்மான் ஸாஹிபு. *(1962). முஸ்லிம் அத்வைத மூலமொழி*, சென்னை, ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

முஹம்மது சஹாப்தீன், ஏ.எம். *(1995). இறைவனும் பிரபஞ்சமும் - இஸ்லாமிய தத்துவக் கருத்துக்கள்*, கொழும்பு, ஏ.எம்.எம். சஹாப்தீன் டிரஸ்ட் பவுன்டேசன் வெளியீடு.

ஜமாஹிர், பீ.எம். *(2021). மெய்யியல் சிந்தனைகள்*, மருதமுனை, நதா வெளியீடு.